# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129851

1. District மாவட்டம் : திருச்சி  PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year: ஆண்டு : 2024  FIR No.: மு.த.அ. எண் : 05/2024  Date: நாள் : 04.03.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018)  Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 01.03.2024  Date to : நாள் வரை : 12.30 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் : –  Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 04.03.2024  Time நேரம் : 17.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : –  Time நேரம் : –

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 35 km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி : கிராம நிர்வாக அலுவலகம், சித்தாநத்தம், மணப்பாறை (TK) திருச்சி Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : –  District : மாவட்டம் : –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : C. வையாபுரி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : சின்னத்தம்பி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 07.10.1972  (d) Nationality : நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : –  Place of Issue : வழங்கப்பட்ட இடம் : –
   (f) Occupation : தொழில் : கூலி  (g) Address : முகவரி : எண். 112, கோங்கம்பட்டி, சித்தாநத்தம் (அஞ்சல்), மணப்பாறை (TK) திருச்சி (Dt)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. [illegible], கிராம நிர்வாக அலுவலர், சித்தாநத்தம் கிராமம், மணப்பாறை (TK), திருச்சி Dt)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – வாதியால் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04.03.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.03.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. [illegible],
Rank: நிலை காவல் ஆய்வாளர், உணவு கடத்தல் தடுப்பு மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு, திருச்சி.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2024-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **04.03.2024** பணியில் இருந்த போது மாலை **17.00** மணியளவில் திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, சித்தாநத்தம்(அஞ்சல்), கலிங்கப்பட்டி என்ற முகவரியில் வசித்து வரும் சின்னத்தம்பி மகன் வையாபுரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, சித்தாநத்தம் கிராம நிர்வாக அலுவலகத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.சிவசெல்வகுமார் மற்றும் புகார்தாரர் திரு.வையாபுரி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று **04.03.2024** மாலை **19.00** மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.**05/2024** சட்டப்பிரிவு **7(a)** ஊழல் தடுப்பு சட்டம் **1988** (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி **04.03.2024** அனுப்புநர் C.வையாபுரி, வயது **51**, த/பெ சின்னத்தம்பி, எண்.**112**, கலிங்கப்பட்டி, சித்தாநத்தம்(அஞ்சல்), மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. ஐயா, நான், மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். **6** ஆம் வகுப்பு வரையில் படித்துள்ளேன். எனது தங்கை காந்திமதிக்கும், அவரது கணவருக்கும் குடும்ப சண்டையின் காரணமாக கடந்த **6** மாத காலமாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். தற்சமயம் எனது தங்கை, அவரது இரண்டு மகன்களுடன் திருச்சி, கே.கே.நகரில் வசித்து வருகிறார். எனது தங்கை காந்திமதி கூலி வேலை செய்து வருகிறார். எனது தங்கையின் குடும்ப சூழ்நிலையினை மனதில் கொண்டு, எனது தங்கை காந்திமதிக்கு, திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், செட்டிசத்திரம் கிராமத்தில் உள்ள TNPL Nagar என்ற மனைப்பிரிவில் **1200** சதுர அடி கொண்ட, ப்ளாட் எண்.**81**-ற்கு கட்டுப்பட்ட சர்வே எண்.76/4AKற்குரிய காலி மனையினை திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், வெங்கடாபுரத்தை சேர்ந்த சுப்ரமணியன் மகன் திரு.நாச்சியப்பன் என்பவரிடம் இருந்து ரூ.**1,20,000/**-ற்கு விலைக்கு வாங்கி அதனை எனது தங்கை காந்திமதியின் பெயரில் **21.02.2024** அன்று மணப்பாறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.**1348/2024**-ன்படி பத்திரப்பதிவு செய்யப்பட்டது. எங்களிடம் மணப்பாறை பத்திர ஆபீஸில், பத்திரப்பதிவு செய்த அன்று இம்மனைக்குரிய பட்டாவானது, மணப்பாறை பத்திரப்பதிவு அலுவலகத்தில் இருந்து சித்தாநத்தம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு சென்றுவிடும்

அப்புறம் அவர்களே உங்களை கூப்பிடுவாங்க அப்ப நீங்க அங்க போனா போதும் என்று கூறி அனுப்பிவிட்டனர். அதன்படி எனது தங்கை மகன் பரிமணம் செல்போனிற்கு 21.02.2024 அன்று மாலை சுமார் 3.30 மணியளவில் சித்தாநத்தம் வி.ஏ.ஒ ஆபிஸில் இருந்து போன் செய்து மேற்படி நில பத்திரத்தின் ஜெராக்ஸ் எடுத்து கொண்டு வரும்படி கூறினார்கள். அச்சமயத்தில் எனது சொந்த வேலையின் காரணமாக நான் விழுப்புரம் சென்றுவிட்டேன். பின்னர், 01.03.2024 அன்று சித்தாநத்தம் வி.ஏ.ஒ ஆபீசுக்கு மதியம் சுமார் 12.30 மணிக்கு நானும் எனது தங்கை மகன் பரிமணமும் சென்றோம். அப்போது வி.ஏ.ஒ ஆபிஸில் இருந்த வி.ஏ.ஒ திரு.சிவசெல்வகுமார் என்பவர் எங்களிடம் இருந்து மேற்படி மனைக்குரிய ஜெராக்ஸ் காப்பிய வாங்கி கொண்டு, டாக்குமெண்டெல்லாம் சரியா இருக்கு, இரண்டாயிரம் பணம் கொடுத்தீங்கன்னா பட்டாவுக்கு ஏற்பாடு பண்ணிடலாம் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் சார், இது என்ன கவர்மெண்ட் பீசா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் கவர்மெண்ட் பீசெல்லாம் கிடையாது இது எனக்கு தனியா தரனும் நிறைய வேலை இருக்கு அதுக்குதான் வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் சார், நானே கூலி வேலை செஞ்சு என்னோட தங்கச்சிக்கு இந்த இடத்தை வாங்கி கொடுக்கிறேன் சார் என் தங்கச்சியும் அவங்க கணவரை பிரிஞ்சு தனியா இருந்து வர்றாங்க. காசில்லாமல் செஞ்சு கொடுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர் பட்டா கொடுக்கறதுல நிறையா வேலை இருக்குதுங்க அதான் கேக்கிறேன். சரி நீங்க வேற கூலிவேல செய்றேன்னு சொல்றதால பாதிய குறைச்சுகிட்டு ஆயிரம் ரூவா மட்டும் கொடுத்தீங்கன்னா உங்க தங்கச்சி பெயருக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்றேன். இதுக்கு மேல குறைக்க முடியாது, இல்லாட்டி நீங்க தாலுகா ஆபிஸில போய் அலஞ்சிக்கிட்டு இருக்க வேண்டியதுதான் என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ரெடி பண்ணிட்டு வந்து உங்கள பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். இந்த விபரத்தை எனது தங்கையிடம் சொன்னேன். அவரும் லஞ்சம் கொடுக்க வேண்டாம் நடவடிக்கை எடுங்கண்ணே என்று சொன்னார். ஆகவே, எனது தங்கை காந்திமதி பெயரில் புதிதாக வாங்கிய மனைக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து தர ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட சித்தாநத்தம் வி.ஏ.ஒ. திரு.சிவசெல்வகுமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (C.வையாபுரி) 4-3-2024 Submitted to the Court of the Hon,ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 17.00 hrs on 04.03.2024 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.05/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 19.00 hrs on 04.03.2024. Sd.xxx (F.Xavier Rani) 04/03/2024 Inspector of Police, V&AC, Trichy.

04.03.2024
(F. Xavier Rani)
Inspector of Police